**OPEN ACCESS**

Manuscript ID: TAM-06012021-4103

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.04.2021

Accepted: 18.06.2021

Published: 01.07.2021

Citation:
Ramya, S. "Simple Medicine in the Life of the People of Mettur Area." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 1, 2021, pp. 131–137.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4103

*Corresponding Author:
ramyasathiyamoorthi88@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Simple Medicine in the Life of the People of Mettur Area

**S. Ramya**
*Ph.D. Research Scholar, Department of Tamil*
*Periyar University, Salem*
http://orcid.org/0000-0002-9106-2973

**Abstract -** It is common for people to develop diseases in the body and to follow various medical procedures as a remedy. The practice of seeking English medicine for some of the simplest diseases is largely absent from the rural population. However, some people consider it polite to seek hospitalization even for minor ailments in daily life such as fever, headache and cataracts. The people of Mettur Region to cure their ailments in a simple manner by following traditional medicine or hand medicine.Remedies like herbal remedies for acne, migraine headaches, nausea, headaches and mouth sores. Traditional medicine is found in those who are intoxicated and poisoned.

**Key Words:** Folk lore, Folk Medicine, Mettur Region People, Chithira Moolam, Sivappu Thumbai, One Side Head ache, Karumboonai Kaichal Ilai

**References**

1. Thirukkural Manikal, Anubava Vaithiyangalum Arokkia unavukalum, Vinayagar Arisi Aalai Tharuma nithi Ilavasa Veliyeedu, Viyabari Moolai, Yalppanam, 1988
2. S.Thilagam (Ed), Anubava Vaithiya Thirattu, Thanjavur Maharaja Sarabojiyin Sarasvathi Mahal Noolagam veliyeedu, Thanjavur, 2006.
3. M.Nandhakumar (Ed). Akkalathu Siddha Vaithiya Palamuraikal, Thanjavur Maharaja Sarabojiyin Sarasvathi Mahal Noolagam veliyeedu, Thanjavur, 1993.
4. S.S.Velum Mayilum, Anubava Vaithiya Thirattu, Sudhesa Vaithiya Thuraikkana Thesiya Niruvanam, Vellvathai, Columbu, 2013.

# மேட்டூர் வட்டார மக்கள் வாழ்வில் எளிய மருத்துவம்

*ச. ரம்யா*
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

**ஆய்வுச் சுருக்கம்**

*உடலில் நோய்கள் ஏற்படுவதும் அதற்குத் தீர்வாகப் பல்வேறு மருத்துவ முறைகள் கடைபிடிப்பது மக்களிடம் வழக்கத்தில் காணப்படுகின்றது. எளிய நோய்கள் சிலவற்றிற்கு ஆங்கில மருத்துவத்தை நாடும் வழக்கம் கிராமப்புற மக்களிடம் பெரிதும் காணப்படுவதில்லை. சிலர் காய்ச்சல், தலைவலி, கண்வலி போன்ற அன்றாட வாழ்வில் உடலில் ஏற்படும் சிற்சில நோய்களுக்கும்கூட மருத்துவமனையை நாடுகின்றனர். மரபுரீதியாகக் கடைபிடித்து வரும் இயற்கை மருத்துவம் அல்லது கை மருத்துவத்தைக் கடைபிடித்து எளிய முறையில் நோய்களைத் தீர்த்துக்கொள்வதை மேட்டூர் வட்டார மக்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். கண்வலி, ஒற்றைத் தலைவலி, நகசுத்தி, தலைப்புண், வாய்ப்புண் போன்றவற்றிற்கு மூலிகைகளைக் கொண்டே தீர்வு காண்கின்றனர். மருவுக்கும் விசக்கடிக்கும் அவர்களிடம் மரபுவழியிலான மருத்துவம் காணப்படுகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *நாட்டுப்புறவியல், நாட்டார் மருத்துவம், மேட்டூர் வட்டார மக்கள், சித்திர மூலம், சிவப்புத் தும்பை, ஓருதலை மண்டையிடி, கரும்பூணை காய்ச்சல் இலை.*

## முன்னுரை

மனிதர்கள் இயற்கை சார்ந்த வாழ்வை வாழும்போது அவர்களிடையே உடல் சார்ந்த நோய்கள் பெரிதும் அச்சுறுத்தும் வகையில் இல்லை. புதிய பண்பாட்டுக் கலப்பினால் ஏற்பட்ட பழக்கவழக்கங்களினால் உடலிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அவை நோய்க் கூறுகளாகப் பெரிதும் காணப்பட்டன. மக்கள் தம் உடலில் ஏற்படும் மாற்றங்களுக்குத் தகுந்த தீர்வைத் தாம் வாழும் சூழலில் உள்ள செடி, கொடி போன்ற தாவரங்கள் மூலம் முயலுகின்றனர். நாகரிக வளர்ச்சியில் மேம்பட்டிருந்தாலும் முன்னர் கடைபிடித்து வந்த கை மருத்துவத்தைக் கைவிட்டு விடாத சமூகங்கள் இன்றைக்கும் காணப்படுகின்றன. அச்சமூகத்தினர் வழி வழியாக தம் உடலில் தோன்றும் நோய்கள், வலிகள், காயங்கள், ஆகியனவற்றுக்கு உரிய மருந்தினையும் மருத்துவ முறைகளையும் மூலிகைகளைக் கொண்டும் உணவுப் பொருட்கள் கொண்டும் தீர்க்க முயலுகின்றனர். இயற்கைக்கும் மனித உடலுக்குமான இடையறாதத் தொடர்பினையே இத்தகைய மருத்துவ முறைகள் சுட்டி நிற்கின்றன. சித்தர்களின் மருத்துவத்தில் சூரணம், பற்பம், புடம் போடுதல் எனக் கடினமான மருத்து தயாரிப்பு முறைகள் காணப்படுகின்றன. சித்த மருத்துவத்தை முறையாகக் கற்றவர்களே அதில் ஈடுபட முடியும். அதுபோலன்றி வீட்டிலேயே சுற்றுப்புறத்தில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு மருத்துவம் செய்து கொள்ளும் வழக்கத்தினை எளிய மருத்துவம் என அழைக்கலாம். இக்கட்டுரை சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டாரத்தில் வாழும் மக்களின் அன்றாட வாழ்வில் கடைபிடிக்கும் சிறிய நோய்களுக்கான எளிய மருத்துவமுறைகளை கள ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட செய்திகளின் அடிப்படையில் எடுத்துரைக்கிறது.

**உடல் நோயும் அனுபவ மருத்துவத் தீர்வுகளும்**

மனிதர்கள் இயல்பான வாழ்வில் நோய்கள் என்பன உடல் முறையாகக் கையாளப்படவில்லை என்பதைச் சுட்டும் அறிகுறிகளாகும். உரிய நேரத்திற்குப் பசியெடுத்து உண்ண வேண்டும், உரிய நேரத்தில் தூங்க வேண்டும். உடல் உழைப்பு இன்றியமையாதது. அதாவது நமது தவறான உணவு முறைகளையும் பிற பழக்க வழக்கங்களையும் திருத்திக்கொள்ள வேண்டும் என்ற உணர்வே நம்மிடம் இல்லாதிருக்குமானால் அந்த உணர்வை நம் உள்ளத்தில் தோற்றுவிப்பதற்காக நம் உடம்பு நோய்வாய்ப்படுகிறது (திருக்குறள் மணிகள், அனுபவ வைத்தியங்களும் ஆரோக்கிய உணவுகளும், ப.1) என்ற கூற்றிற்கிணங்கள் உடலில் நோய்கள் ஏற்படுவதற்கு முறையான பழக்கங்களைக் கடைபிடிக்க உள்ளம் உணர்த்துவதன் எதிரொலியாகும் என்பது கூறப்படுகிறது.

சில தட்ப வெப்ப சூழல்கள் மாற்றத்தின் போது கூட உடல் நலத்திற்கு தீங்கு நேரலாம். விலங்குகள், விஷ உயிரினங்களாலும் உடலுக்குத் தீங்கு நேரலாம். இவற்றைத் தம் அனுபவ வைத்திய முறைகளால் பழங்காலத்தில் தீர்த்தனர். இப்போதும் அதே அனுபவ வைத்திய முறைகள் பின்பற்றப்படும் சமூகங்களில் அவற்றைக் கைக் கொள்ளுகின்றனர். ஆங்கில மருத்துவத்தின் வருகையால் மக்களிடம் இருந்த வைத்திய முறைகள் மறைந்து பட்டனவெனினும் முழுவதுமாக மறைந்து விடவில்லை அடுத்தபுறம் மேல்நாட்டு மிசனரிமாரின் வருகை, மேல்நாட்டு மருத்துவ ஆதிக்கம், தமிழர் மருத்துவத்தில் ஏற்படுத்திய தாக்கமும் பின்னடையும் தமிழ் பாரம்பரிய வைத்திய முறையை முற்றாக அழித்தொழித்து விட முடியாத நிலையையும் மறுப்பதற்கில்லை (சி.சி.வேலும் மயிலும், அனுபவ வைத்தியத் திரட்டு, ப.1) என்ற கூற்று இதனை உணர்த்துகிறது. சில சமூகங்களில் பாரம்பரிய அனுபவ வைத்திய முறையின் மூலம் எளிய சிகிச்சையை மேற்கொண்டு அன்றாட வாழ்வில் தோன்றும் நில நோய்களை நீக்குகின்றனர் என்பதை அறிய முடிகிறது.

**கண்வலி**

கண்ணில் அடிபட்டு சிவந்து இருப்பின் கண்வலி ஏற்படும். அதனைப் போக்குவதற்கு முன்னோர்கள் பனை மரக்கன்றில் உள்ள தண்டுப் பகுதியை அறுத்து நசுக்கி அதில் வரும் சாற்றினை கண்ணில் விட்டுக் குணப்படுத்தினர். அவ்வாறு செய்தால் கண்ணில் அடிபட்டு சிவப்பாக இருப்பது மறைந்து வலியும் குறைந்து போகும். இம்முறையை சேலம் மேட்டூர் வட்டார மக்களுக்குச் சிகிச்சையாக செய்து வருகின்றனர். கண் சிவத்தல் என்பது அதன் இயல்பான தன்மையிலிருந்து மாறியதைக் காட்டும் குறிப்பாகக் கொண்டு அதன் வலியைப் போக்குதற்கு பனையின் தண்டினைக் கொண்டு சாறெடுத்து கண்ணில் விட்டு குணத்துப்படுத்துகின்றனர். கண் வலிகளுக்குப் பொதுவாக தாய்ப்பாலை விடுவதும் உண்டு. கண்ணில் சொங்கு செருகிக் கொள்ளுதல், கள்ளிப் பால் விழுந்து விடுதல், தூசி விழுந்து விடுதல் போன்றவற்றிற்கும் தாய்ப்பாலை விடுவர். அதற்குப் பதிலாகப் பனைத்தண்டுச் சாற்றினை உபயோகித்துக் கண்வலியை நீ க்குகின்றனர் என்பதை தகவலாளர்கள் வழி அறிந்து கொள்ள முடிந்தது.

**மருவு**

மனிதர்க்கு இயற்கையிலேயே மருக்கள் தோன்றும். அது அழகைக் கெடுப்பதாகவும் இருக்கும். சில மருக்களை நீக்க முடியாது. ஆனாலும் சிலவற்றை அதற்குரிய மருத்துவத்தைக் கொண்டு நீக்கிவிட முடியும். மேட்டூர் வட்டார மக்கள் மக்கள் மருவை நீக்கும் மருத்துவத்தைக் கைக் கொண்டிருக்கின்றனர். சித்தரமூலம் (அ) கொடிவேலி என்னும்

மூலிகை விஷத் தன்மை வாய்ந்தது. இது மருவைப் போக்கக்கூடிய ஒன்றாக விளங்குகிறது.

சித்திர மூலம் என்ற செடியின் வேரினையும் எருக்கம் பாலையும் சேர்த்து அரைத்து பசை போல் வந்தவுடன் மருவின் மேல் தடவி வர மூன்று அல்லது நான்கு மாதங்களில் சிறிது சிறிதாக மறையும். கோவில்களில் உள்ள குளங்களில் கல் உப்பு (மற்றும்) மிளகு சேர்த்து மூன்று முறை போட்டால் மருவு நீங்கும் என்று மக்கள் நம்புகின்றனர். அடிப்படையில் மூலிகை மருத்துவத்தையே கடைபிடிக்கும் மக்கள் கோயில்களில் நேர்ந்து கொள்வதும் உண்டு. அப்படி நேர்ந்து கொண்டவர்கள் கோயில் திருவிழாக்களின் போது பொம்மை வாங்கி வைத்தல்,பூக்குழிதிருவிழாவின்போதுதீயில் உப்பு வாங்கி போடுதல் போன்றவற்றை செய்தால் மருவு நீங்கும் என்னும் நம்பிக்கை பரவலாக பெரும்பாலான சமூக மக்களிடம் காணப்படும் நம்பிக்கையாகும். மேட்டூர் வட்டார மக்களிடமும் இதுபோன்ற ஒரு நம்பிக்கை காணப்படுகிறது. நம்பிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு சிகிச்சை முறைகள் பெரும்பாலும் இருப்பதில்லை. அறிவியல் சார்ந்தவற்றால்தான் நோய்கள் நீங்கும் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது. சித்திர மூல வேரினைக் கொண்டு மேட்டூர் வட்டார மக்கள் மருவை நீக்கும் முறைகளைப் பின்பற்றுவதையே முதன்மையான மருத்துவமாகக் கொள்ளலாம்.

## நக சுத்தி

விரல்களில் உள்ள நகங்களின் மேல் அடிபட்டாலோ வேறு ஏதேனும் தொற்றினாலோ நகத்தைச் சுற்றிலும் வீங்குவதுண்டு. இந்த வீக்கம் கடுமையான வலியை ஏற்படுத்தக்கூடியதாகவும் அமையும். இதனைக் கிராமங்களில் நகச்சுத்தி என்று கூறுவர். நகச்சுத்தியினை நீக்கும் மருத்துவமாக பெரும்பாலான சமூகங்களில் எலுமிச்சம்பழத்தைப் பயன்படுத்துவர். அதனை விரலில் செருகி வைத்தால் வீக்கம் குறைந்து நகச்சுத்தி குணமாகும். ஆனால் மேட்டூர் வட்டார மக்கள் அதற்கான கை மருத்துவம் ஒன்றினைக் கைக்கொண்டுள்ளனர். தும்பையில் ஒரு வகையான சிவப்புத் தும்பையின் இலையை நன்கு தேய்த்து நகசுத்தி உள்ள இடத்தில் வைத்து கட்டினால் ஐந்துநாட்களில் வலி குறைந்து சரியாகி விடும். கீரை வைத்துக் கட்டுதல் என்னும் முறையினைக் கொண்டும் நக சுத்திக்குத் தீர்வு காண்கின்றனர். காடுகளில் கிடைக்கும் புளித்த கீரையை நன்கு வேக வைத்து கை ஏற்கும் சூட்டில் நக சுத்தி உள்ள இடத்தில் பருத்தித் துணியில் பொதிந்து வைத்துக் கட்ட நக சுத்தி குணமாகும். நகக் கண்ணில் ஏற்படும் காயங்கள், ஊமைக் காயங்கள்தான் நகச் சுத்தி ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றன. உடலில் ஏற்படும் காயங்களை ஆற்றும் வல்லமை கீரைக்கு இருக்கிறது.

## ஒற்றைத் தலைவலி

தட்பவெப்ப நிலை மாறுபாட்டால் சிலருக்குத் தலைவலி ஏற்படுதுண்டு. ஒருபக்கத் தலைவலி என்பது தலைவலியிலிருந்து மாறுபட்டதாகும். கடுமையான வலியைத் தரக் கூடியதாக இருக்கும். ஒற்றைத் தலைவிக்கு நீர்க்கோர்வையே காரணமாக அமையும். அல்லது முறையான உணவுப் பழக்கம் காரணமாகும். உடல் மனிதர்கள் கைக்கொள்ளும் சில பழக்கங்களை உடல்நிலை ஒத்துக் கொண்டால் ஏற்றுக் கொள்ளும் சில பழக்கங்கள் உடலுக்கு தீங்கு தரும் என்றால் அதை ஏற்றுக்கொள்ளாமல் நோயை உண்டாக்கும். அதுமாதிரியான பக்க விளைவாகவே ஒற்றைத் தலைவலி உருவாகிறது. ஒருதலை மண்டையிடி என்று இதனைச் சித்த மருத்துவத்தில் அழைக்கின்றனர். ஒருதலை மண்டையிடிக்கு

வேலிப்பருத்தியைக் கொண்டு வந்து கசக்கிச் சாறு பிழிந்து தலையிலே தேய்க்கத்தீரும் (ச.திலகம் (ப.ஆ), அனுபவ வைத்தியத் திரட்டு, ப.50) என்று வேலிப் பருத்தியை தீர்வாகக் கூறுகின்ற ஓலைச் சுவடி வைத்தியத்திலிருந்து மாறுபட்டு தம் சூழலில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு அதனைத் தீர்க்கின்றனர். கரும்பூணை காய்ச்சல் இலையைப் பறித்து நன்கு பிசைந்து தலைவலி உள்ள இடத்தில் தேய்த்து வர ஒற்றைத் தலைவலி நீங்கும் எனச் மேட்டூர் வட்டார மக்களின் மருத்துவம் கூறுகிறது. இரண்டு மருத்துவத்திலும் தலையில் தேய்த்தால் தீரும் என்பது தீர்வாகிறது. மூலிகைகள்தான் வேறுபடுகின்றன. அவ்வாறு தேய்த்த பின் எதிர் வருபவர்களிடம் பேசாமல் வீட்டிற்குச் செல்ல வேண்டும். அவ்வாறு பேசினால் தலைவலியானது பேசுபவர்களுக்கும் வந்து விடும் என்று மக்கள் மேட்டூர் வட்டார மக்கள் கூறுகின்றனர். இதுவும் ஒரு வகையான நம்பிக்கையாக இருக்கிறது. இதனை அவர்கள் கடைபிடித்து வருகின்றமையால் அவ்வாறு கூறுகின்றனர். மேலும் கொழிஞ்சி பழச் சாற்றை எடுத்து தலைவலி உள்ள பக்கம் காதில்விட ஒற்றைத் தலைவலி நீங்கும் எனவும் குறிப்பிடுகின்றனர்.

### தலைப் புண்

மனிதர்க்கு தலைக்காயம் ஏற்படாவாறு பாதுகாத்துக் கொள்வதை அரசுகள் வலியுறுத்துகின்றன. வாகனங்களில் செல்வோர் தலைக்கவசம் அணிய வேண்டியதன் தேவையை உணர்த்துகின்றனர். தலையில் காயம் ஏற்பட்டால் அது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும். எண் சாண் உடம்பில் சிரசே முதன்மை என்னும் சொலவடையும் தலையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. தலையில் ஏற்படும் காயங்களை உடனடியாக ஆற்ற வேண்டும். தலையில் காயம்பட்டாலோ, பொடுகு போன்றவற்றினாலோ காயம் ஏற்பட்டு புண்ணாகியிருந்தால் அதனை ஆற்றுவதற்கு ஆடாதொடா இலையை நன்கு அரைத்து அதன் சாற்றினை புண்மேல் தடவி வர தலை புண் நீங்கும் எனச் மேட்டூர் வட்டார மக்களின் எளிய முறையிலான மருத்துவம் குறிப்பிடுகிறது. மேலும் ஆடாதொடா இலை, வெற்றிலைக் காம்பு, துவரம் பருப்பு, வெள்ளைப் பூண்டு, பச்சரிசி இவையனைத்தும்சேர்த்து மென்றுதலைப்புண் உள்ளவர் காதில் வேறு ஒருவர் ஊதினால் உடலில் பரவாமல் புண்ணைக் குணப்படுத்தும் எனவும் கூறப்படுகிறது. காதில் ஊதினால் தலைப் புண் குணமாகும் என்பது மருத்துவத்தின் மகத்துவத்தை வெளிப்படுத்துகிறது. உடலில் உள்ள புள்ளிகள் குறித்து அக்குபிரசர் மருத்துவம் குறிப்பிடுகிறது. காதுகளில் உடலின் அத்தனை உறுப்புகளின் புள்ளிகளும் காணப்படுகின்றன. அதனை நீவி விடுதல், தடவி விடுதல் மூலம் அப்புள்ளிகள் தூண்டப்பட்டு உறுப்புகள் செயல்பட வைக்கப்படுகின்றன. ஆனால் காதில் ஊதுவதும் இதுபோன்ற அக்குபிரசர் மருத்துவ முறையினை ஒத்ததாகக் காணப்படுகிறது.

### வாய்ப்புண்

சத்துக் குறைவினால் வாயின் ஓரங்களில் புண் ஏற்படுவதுண்டு. அப்புண் வாயின் அழகைக் கெடுப்பதாகவும் உணவு உண்ணும்போது வலியை ஏற்படுத்துவதாகவும் அமையும். இந்த வாய்ப்புண் குணமடைய உதயம் பட்டையை மென்று சாப்பிட்டால் அம்மரப் பட்டையில் உள்ள துவர்ப்பு வாய்ப்புண்/வயிற்றுப்புண் ஆகியவற்றை நீக்கும் எனக் குறிப்பிடுகின்றனர். வயிற்றில் ஏற்படும் புண்ணும் வாயில் புண் வரக் காரணமாக அமையலாம். எனவே வயிற்றுப் புண்ணை ஆற்றினால் இயல்பாகவே வாய்ப்புண்ணும் நீங்கி விடும் என்னும் அடிப்படையில்மேட்டூர்வட்டாரமக்களின் மருத்துவமானது வாய்ப்புண்ணையும் வயிற்றுப் புண்ணையும் இணைத்து நீக்கும் வகையில் அமைகிறது.

### விசக்கடி

மனிதர்களுக்கு ஊறு செய்யும் ஊர்வனவற்றில் பல விசமுள்ளவையாக இருக்கின்றன. தேள், பூரான், எலி, பாம்பு போன்றவை கடித்தால் அது விசமாக மனிதர்க்கு உயிர் இழப்பை ஏற்படுத்தக் கூடியனவாக அமையும். விசக்கடிகளுக்கு சித்தமருத்துவத்தில் அஞ்சன மருந்து என்ற ஒன்றினைத் தயாரித்துத் தலையில் தேய்த்து குணப்படுத்தும் விதம் சித்த மருத்துவச் சுவடிகளில் காணப்படுகின்றது. சுத்தம் செய்த நீர்வாளம் பருப்பு, நீலி (அவுரி), துய்யமடையன், திரிகடுகு, பூண்டு இவைகளை சமன் அளவு எடுத்துக் கொண்டு கல்வத்தில் போட்டு நீலிச்சாற்றை விட்டு அரைத்து உருண்டை செய்து நிழலில் காய வைத்துக் கொள்ள வேண்டும், இந்த மருந்தை வெற்றிலைச் சாறு அல்லது வெந்நீர் விட்டு உரைத்து விஷம் கடித்தவன் கண்விழிகளில் 5 சொட்டு வீதம் போடவும். இப்படிப் போட்டால் சற்று நேரத்திற்கு அசையாத உடல் அசையும், கண்கள் திறக்க முடியாத நிலையில் இருந்த கண்கள் திறக்கும் மூச்சு தடைபட்டு இருந்தாலும் சரியாகும். பத்தியம் பச்சரிசி கஞ்சி கொடுக்கவும் (மு.நந்தகுமார் (ப.ஆ), அக்காலத்துச் சித்த வைத்தியப் பலமுறைகள், ப.5) என்று சித்த மருத்துவச் சுவடிகளில் கூறப்பட்டு உள்ளன. இது போன்ற விசக்கடிகள் வாழ்வில் தவிர்க்க முடியாதனைவாக இருத்தலால் அதற்கான மருத்துவமும் வெவ்வேறு தன்மையில் காணப்படுகின்றன. மேட்டூர் வட்டார மக்கள் விசக்கடிக்கு சிறிய நங்கை இலையை நன்கு கசக்கி விசக்கடியின் மீது தடவி விட்டால் சிறிது நேரத்திற்கு விசம் உடல் முழுவதும் பரவாமல் தடுக்கப்படும் என்று குறிப்பிடுகின்றனர். மேலும் தேள் கடித்தால் அத்தி கட்டி அல்லது ஆலங்கட்டியை விசக்கடியின் மீது தடவி வர விசம் முறியும் என்று நம்புகின்றனர்.

### முடிவுரை

பண்டையத் தமிழர்கள் முதல் இக்காலத்துத் தமிழர்கள் வரை தம் வாழ்வில் பல்வேறு நோய்களுக்கும் பல்வேறு மருத்துவ முறைகளைக் கைக்கொள்கின்றனர். சில எளியனவாகவும், சில கடுமையான பத்திய முறைகளைக் கொண்டும் அமைகின்றன. சிறிய அளவிலான நோய்கள் மக்களுக்கு கேடு செய்யும் வகையில் தோன்றுகின்றன. பண்பாட்டு வழக்கங்கள் மாறும்போது உடலின் ஏற்புடைமையைப் பொறுத்து நோய்கள் உருவாகின்றன. உடல் தன்னை தகவமைத்துக் கொள்ளும் விதத்தில் உரிய நேரத்தில் உரிய பணிகளைச் செய்து வருகிறது. அதில் தடையேற்படும் போது அதை உணர்த்தும் விதமாக நோய்கள் ஏற்படுகின்றன. அன்றாட வாழ்வில் சந்திக்கும் சில நோய்களை மருத்துவமனை சென்று தீர்க்க வேண்டிய தேவையின்றி வீட்டிலேயே எளிய மருத்துவ முறைகளைக் கைக்கொண்டு போக்கிக் கொள்ளலாம். மேட்டூர் வட்டார நகர செட்டியார் இன மக்களின் எளிய மருத்துவ முறைகள் சித்த மருத்துவத்தைப் போலவோ வேறு பல சிகிச்சை முறைகளைப் போலவே கடுமையான முறைகளைப் பின்பற்றாத வகையில் அமைகின்றன. கண்வலி, ஒற்றைத் தலைவலி, வாய்ப்புண், மருவு, நகசுத்தி, தலைப்புண் ஆகியனவற்றுக்கு வீட்டு மருத்துவத்தைக் கைக்கொள்கின்றனர்.

### துணைநூற்பட்டியல்

1. திருக்குறள் மணிகள், அனுபவ வைத்தியங்களும் ஆரோக்கிய உணவுகளும், விநாயகர் அரிசி ஆலை தருமநிதி இலவச வெளியீடு, வியாபாரி மூலை, யாழ்ப்பாணம், 1988.
2. ச.திலகம் (ப.ஆ), அனுபவ வைத்தியத் திரட்டு, தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மகால் நூலகம் வெளியீடு, தஞ்சாவூர், 2006

3. மு.நந்தகுமார் (ப.ஆ), அக்காலத்துச்சித்த வைத்தியப் பலமுறைகள், தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மகால் நூலகம் வெளியீடு, தஞ்சாவூர், 1993.
4. சி.சி.வேலும் மயிலும், அனுபவ வைத்தியத் திரட்டு, சுதேச வைத் தியத் துறைக்கான தேசிய நிறுவனம், வெள்ளவத்தை, கொழும்பு, 2013

**தகவலாளர்கள்**

1. அம்மாசி, செம்மனூர், வயது 80
2. காளியம்மாள், கப்ப காளிப்பட்டி வயது 65
3. சம்பூரணம், பொட்டடநேரி, வயது 60
4. மாரியாயி, மாமரத்தூர், வயது. 60
5. சகுந்தலா செம்மனூர், வயது 65
6. கருப்புசாமி, செங்காட்டூர் வயது 65
7. பழனியம்மாள், அத்திமரத்தூர், வயது 64